# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2016

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 7

சுட்டெண்: | | | | | | | |

நேரம்: 150 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 15 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 5 | | | |
| 7 | 20 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. இயல் இசை நாடகம் என்பன

அ) முப்பால் ஆ) முத்தமிழ் இ) முக்கனி ஈ) மூவிடம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. சிலப்பதிகாரக் கதை சேரநாடான வஞ்சி மாநகரில்

அ) தொடங்கியது ஆ) முடிவுற்றது இ) தொடர்ந்தது ஈ) தொடரும்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. **பழமொழி :-** வெள்ளம் வருமுன் ________________ கட்ட வேண்டும்.

அ) பிணை ஆ) கணை இ) அணை ஈ) மணை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. 1890ஆம் ஆண்டில் ஆங்கிலேய அரசின் வன்னி மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தவர்

அ) றொபேட்நொக்சு ஆ) தோமசுவான்றி

இ) ஜே.பி. லூயிசு ஈ) எச். டபிள்யூ. கொட்றின்ரன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. வரைந்த என்பது

அ) வினையெச்சம் ஆ) பெயரெச்சம்

இ) வினைமுற்று ஈ) பெயர்ச்சொல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. தேசிய தீரச் செயலுக்கான பட்டயத்தைப் பெற்றவன்

அ) பிரிங்கர் ஆ) வீரபாண்டியன்

இ) இலக்கியன் ஈ) மருதுபாண்டியன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. மேடு என்பதன் எதிர்ச்சொல்

அ) குன்று ஆ) திடல் இ) காடு ஈ) பள்ளம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. தமிழகத்தில் கல்லணை கட்டுவதற்காகப் பன்னீராயிரம் சிங்களவர்களைச் சிறைப்பிடித்துச் சென்ற மன்னன்

அ) பராந்தகசோழன் ஆ) கரிகாற்சோழன்

இ) இராசேந்திரசோழன் ஈ) இராசராசசோழன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. புதுமை + ஆண்டு என்பதைச் சேர்த்து எழுதினால்

அ) புதியஆண்டு ஆ) புதுமைஆண்டு

இ) புத்தாண்டு ஈ) புதுமையாண்டு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. மூங்கிலிலிருந்து செய்யப்படும் இசைக்கருவி

அ) வீணை ஆ) புல்லாங்குழல் இ) தண்ணுமை ஈ) யாழ்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. ஏறிஏறி என்பது

அ) இரட்டைக்கிளவி ஆ) இணைமொழி

இ) அடுக்குத்தொடர் ஈ) அடுக்கிடுக்குத்தொடர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. இசை நுணுக்கம் பற்றிக் கூறும் நூல்

அ) சிலப்பதிகாரம் ஆ) குண்டலகேசி

இ) வளையாபதி ஈ) சீவகசிந்தாமணி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. சுட்டெழுத்துகளில் ஒன்று

அ) ஏ ஆ) உ இ) யா ஈ) ஆ

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. கயிலைவன்னியனுக்கு அஞ்சிப் போர்த்துக்கேயர் பெங்சூற்றர் எனும் கோட்டையை அமைத்த இடம்

அ) வெற்றிலைக்கேணி ஆ) ஆனையிறவு

இ) மட்டக்களப்பு ஈ) முல்லைத்தீவு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. கல்மேல் எழுத்துப்போல் என்றும் அழியாமல் இருப்பது

அ) பணம் ஆ) செல்வம் இ) பொருள் ஈ) கல்வி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. குழலி ஆடினாள். இது

அ) 1ஆம் வேற்றுமை ஆ) 3ஆம் வேற்றுமை

இ) 2ஆம் வேற்றுமை ஈ) 4ஆம் வேற்றுமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. புலவருக்கு விசிறி வீசிப் பணிவிடை செய்த நனிமிகு புகழுடன் நாடாண்ட வேந்தன்

அ) சோழன் ஆ) சேரன் இ) பாண்டியன் ஈ) பல்லவன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. கயிலைவன்னியன் ஆட்சிக் காலம் ________________ இல்லாத பொற்காலமாகும்.

அ) கங்குகரை ஆ) ஈடுஇணை இ) சீருஞ்சிறப்பும் ஈ) வீரதீரம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. முகம்மாறி நோக்கின் விருந்தினர் உள்ளம் ______________ ப் போன்று வாடிவிடும்.

அ) அனிச்சம்பூ ஆ) தாமரைப்பூ இ) அல்லிப்பூ ஈ) மல்லிகைப்பூ

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. கண்டான் என்ற சொல்லின் வினையடி

அ) கண் ஆ) காண் இ) கண்ட ஈ) கண்டு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. கயிலைவன்னியன் ஆட்சி செய்த காலம்

அ) 35 ஆண்டுகள் ஆ) 34 ஆண்டுகள்
இ) 44 ஆண்டுகள் ஈ) 48 ஆண்டுகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. உலகம் போற்றும் முத்தமிழ் வித்தகர் எனப் புகழ் பெற்றவர்

அ) பாரதியார் ஆ) பாவேந்தர் இ) பெரியார் ஈ) விபுலாநந்தர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. இலங்கையில் கண்ணகி வழிபாட்டைத் தொடக்கி வைத்தவன்

அ) செங்குட்டுவன் ஆ) கயபாகு இ) புலகந்தன் ஈ) தொண்டைமான்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. ஔவையாரின் பாடல்கள் அறிவைத் தரும். இச்சொல்லியத்தில் இடம்பெற்றுள்ள செயப்படுபொருள்

அ) ஔவையார் ஆ) அறிவை இ) பாடல்கள் ஈ) தரும்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. வானத்து விண்மீன்கள் போன்று புவியில் வித்தை காட்டியவை

அ) வண்ணத்துப்பூச்சிகள் ஆ) கரப்பான்பூச்சிகள்

இ) மின்மினிப்பூச்சிகள் ஈ) பட்டுப்பூச்சிகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. இரட்டைக்கிளவிக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) மணிமணி ஆ) சிடுசிடு இ) நேர்நேர் ஈ) மின்னிமின்னி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. வீரபாண்டிய கட்டப்பொம்மன் ஆட்சிசெய்த இடம்

அ) பாஞ்சாலங்குறிச்சி ஆ) திருநெல்வேலி

இ) நாகபட்டினம் ஈ) மதுரை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. நீங்கள் + உடன் என்பதைச் சேர்த்தால்

அ) நீங்களுடன் ஆ) உங்களுடன்

இ) நீயுடன் ஈ) உன்னுடன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. இலக்கிய இன்பம் என்னும் பாடத்தில் முகிலைக்கிழித்து மழையோடு கீழே இறங்கியது

அ) சுறாமீன் ஆ) முரல்மீன் இ) வாளைமீன் ஈ) பாரைமீன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. நன்னெறிப் பாடலில் சினத்துக்கு உவமையாகக் கூறப்பட்டது

அ) தீ ஆ) காற்று இ) வெள்ளம் ஈ) புயல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

## 2) பாடநூல் வினா - ஏழில் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. நால்வகை இசைக்கருவிகளின் பெயர்களைத் தருக.

______________________________

______________________________

2. அதிதொலைவில் இருந்து சேரமன்னனைக் காண வந்த புலவர் யார்?

______________________________

______________________________

3. வன்னியில் ஊர்ப்பெயர்களாகக் கொண்டமைந்த நீர்நிலைகளைக் குறிக்கும் சொற்கள் நான்கு தருக.

______________________________

______________________________

4. சினங்காத்தல் பற்றிக் கூறியவர்களில் இருவரின் பெயர்களைத் தருக.

______________________________

______________________________

5. கயிலைவன்னியனின் ஆட்சிப்பகுதி தென்கிழக்கே கொட்டியாரம் வரை பரந்திருந்தது எனக் குறிப்பிட்ட ஆங்கிலேயர் யார்?

______________________________

______________________________

6. உழவர் வயலை உழும்போது மண்ணிடையே புதையுண்டு கிடந்தவை எவை?

______________________________

______________________________

7. வன்னியில் மாற்றாருக்கு எதிராகப் படை திரட்டிப் போராடிய அரசகுல மகளிர் ஒருவரின் பெயரைக் குறிப்பிடுக.

______________________________

______________________________

புள்ளிகள் 10

## 3) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழு விடை தருக.

தொன்மைக் காலத்தில் இருந்து மக்களின் முதன்மையான தொழில்களில் ஒன்றாகக் கடற்றொழில் இருந்து வருகின்றது. எமது தாய்நாட்டின் அடிப்படைத் தொழில்களில் கடற்றொழிலும் ஒன்றாகும். தமிழீழம் மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்டிருப்பதால் அதிக கடல் வளத்தைக் கொண்டுள்ளது. இங்குள்ள ஆழமற்ற கடற்பகுதியான கண்டமேடையில் மீன்களின் உணவான 'பிளாங்ரன்' அதிகமாகக் காணப்படுவதால் மீன்களின் உற்பத்தி அதிகமாகும். பருத்தித்துறைக்கு அண்மையில் உள்ள 'பேதுரு' கடலடித் தள மேடையில் மீன் வளம் அதிகமாகக் காணப்படுகின்றது. இங்குள்ள மீன் வளத்தை சிங்கள, இந்திய மீனவர்கள் களவாடிச் செல்வதனால் எமது மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர். எமது நாட்டில் இருந்து இறால், சிங்கறால், கடலட்டை என்பன பதப்படுத்தப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. கடல் வளத்தினை நாம் நிறைவாகப் பயன்படுத்தினால் முன்னேற்றம் அடையலாம்.

1. தொன்மைக் காலத்தில் மக்களின் முதன்மையான தொழில்களில் ஒன்றாக இருந்தது எது?

_______________________________________________

_______________________________________________

2. தமிழீழம் எத்தனை பக்கம் கடலால் சூழப்பட்டுள்ளது?

_______________________________________________

_______________________________________________

3. கண்டமேடைப் பகுதியில் உள்ள மீன்களின் உணவு எது?

_______________________________________________

_______________________________________________

4. எமது மீன்வளத்தைக் களவாடிச் செல்பவர்கள் யார்?

_______________________________________________

_______________________________________________

5. பதப்படுத்தப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்ற கடலுணவுகள் எவை?

_______________________________________________

_______________________________________________

புள்ளிகள் 10

## 4) இலக்கண - மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. பின்வரும் வேற்றுமைகளின் உருபுகள் இடம் பெறுமாறு சொல்லியங்கள் எழுதுக.

2ஆம் வேற்றுமை உருபு: ______________________

4ஆம் வேற்றுமை உருபு: ______________________

2. சொற்பொருள் தருக.

வேய் ______________________ பழனம் ______________________

துயில் ______________________ பனுவல் ______________________

மேதி ______________________ இடர் ______________________

3. தரப்பட்டுள்ள மரபுச் சொற்களின் பொருள் விளங்குமாறு சொல்லியங்கள் எழுதுக.

பக்கம்பக்கமாய்: ______________________

விடியவிடிய: ______________________

4. படி என்ற சொல் பெயராகவும் வினையாகவும் அமையுமாறு சொல்லியங்கள் எழுதுக.

பெயர்: ______________________

வினை: ______________________

5. பின்வரும் புணர்ச்சி வகைகளுக்கு எடுத்துக்காட்டுத் தருக.

தோன்றல்: ______________________

திரிதல்: ______________________

இயல்பு: ______________________

புள்ளிகள் 15

**5) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக வைத்து கவிதையை முழுமை ஆக்குக.**

# ஆசை

| | | | | |
|---|---|---|---|---|
| பூக்களில் | என்னைத் | சிறகடித்து | முளைக்கும் | கூந்தலில் |

தென்றல் வந்து ____________ தொட்டு

தேசமெங்கும் முத்தமிட்டது

வண்ணவண்ணப் ____________ மோதி

வாசமதைத் தொட்டுச் சென்றது

மங்கையவள் ____________

மலர்க்கணையாய் தைத்துச் சென்றது

தேசக் காற்றாய் வீசுந் தென்றலே - உனைப்போல்

____________ ப் பறக்க எனக்கும் ஆசைதான்

எனக்கும் சிறகுகள் ____________ அப்போது

தேசம் வந்து முத்தமிடுவேன்

| புள்ளிகள் 10 |
|---|

## 6. பந்தியைத் தமிழ்மொழியில் மாற்றி எழுதுக.

I sat on the front seat on the bus. Then an elderly person got on the bus. There was no seat for her to sit down. I immediately got up from my seat. The elderly person sat on my seat. She smiled at me. She thanked me.

Ich saß in der ersten Reihe des Busses. Dann stieg eine ältere Dame in den Bus ein. Es gab keinen Platz auf den sie sich setzen konnte. Ich stand sofort auf. Die ältere Dame setze sich auf meinen Platz. Sie schaute mich an und lächelte mich an. Sie dankte mir.

Jeg satte mig på forsædet i bussen. Så kom der en ældre person i bussen. Der var ingen pladser at sidde på for hende. Jeg rejste mig straks op. Den ældre person satte sig på min plads. Hun kiggede på mig og smilede. Hun takkede mig.

Ik zat op de voorbank van de bus. Toen stapte een bejaarde vrouw op de bus. Er was geen stoel voor haar te gaan zitten. Ik stond meteen op uit mijn stoel. De bejaarde ging op mijn stoel zitten. Ze glimlachte naar me. Ze bedankte me.

Mi sono seduto sul sedile anteriore dell'autobus. Successivamente/poi una signora anziana è salita sull'autobus. Per lei non c'era un posto libero dove sedersi. Io mi sono immediatamente alzato dal mio posto. La signora anziana si è seduta al mio posto. Lei mi ha sorriso. Lei mi ha ringraziato.

Jeg satt på det første setet foran i bussen. Så kom det en eldre dame på bussen. Det var ikke plass for henne til å sette seg ned. Jeg reiste meg med en gang. Den eldre damen satte seg på min plass. Hun smilte til meg. Hun takket meg.

Jag satt på första sätet på bussen. Sedan klev en äldre kvinna på bussen. Det fanns inga säten för henne att sitta på. Genast reste jag mig från sätet. Den äldre kvinnan satte sig på mitt säte. Hon kollade på mig och log. Hon tackade mig.

Je me suis assis au premier rang dans le bus puis une femme âgée est montée dans le bus. Il n'y avait plus aucune place pour elle. Je me suis tout de suite levé de mon siège. La femme âgée s'est assise à ma place. Elle m'a souri et m'a remercié.

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து, 125 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- இலங்கைத்தீவிலே தமிழர் ஆட்சியும் மாட்சியும
- எனது தாயகம்
- நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்

புள்ளிகள் 20